123. அரசினர் உயர்நிலைப் பள்ளி, குருமந்தூர்.

124. சி. எஸ். ஐ. மகளிர் உயர்நிலைப் பள்ளி, தாராபுரம்.

125. புஞ்சை புளியம்பட்டி மகளிர் உயர்நிலைப் பள்ளி.

126. ஸ்டேன்ஸ் ஆங்கிலோ இந்தியன் பள்ளி, குன்னூர்.

இணைப்பு III

(124 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 143 தனியார் ரப்பர் தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 2,500 தொழிலாளர்கள் 17—10—1983 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

24—10—1979 ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கும் அவர்களின் தொழிலாளர்களுக்குமிடையே ஊதியம், அகவிலைப்படி முதலானவை பற்றி தொழிற் தகராறுச் சட்டம் பிரிவு 12 (3)ன் கீழ் செய்து கொண்ட ஒப்பந்தம் 30—11—1981 உடன் முடிவடைந்தது. இவ்வொப்பந்த காலம் முடிந்துவிட்டது என்ற காரணத்தால், தோட்ட உரிமையாளர்கள் அவ்வொப்பந்த ஷரத்துப்படி, நாகர்கோவில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியைக் கணக்கில் கொண்டு அதற்கீடாக, நான்கு மாதங்களுக்கு ஒரு முறை உயர்த்தி அளிக்க வேண்டிய அகவிலைப்படியை 1—4—1982 முதல் தராமல் நிறுத்தி விட்டனர். நாகர்கோவில் வாழ்க்கை செலவுப் புள்ளியின் அடிப்படையில் தொடர்ந்து அகவிலைப்படி அளித்தால் தாங்கள் தொழில் நடத்த முடியாது என்பது அவர்கள் வாதம்.

இத்தொழிற் தகராறின் விளைவாக 8—12—1982 முதல் மாறுபடும் அகவிலைப்படி மற்றும் இதர கோரிக்கைகளை முன் வைத்து வேலை நிறுத்தம் செய்ததால் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் தலையிட்டு இருதரப்பாருக்குமிடையே ஒரு இடைக்கால ஒப்பந்தத்தை 11—12—1982 ல் ஏற்படுத்தித்தந்தார். அதன்படி தொழிலாளர்களுக்கு 1—12—1981 முதல் 50 காசுகளும் 1—4—1982 முதல் ரூபாய் ஒன்றும், அதாவது அதிகப்படியாக 50 காசுகளும் கிடைக்கலாயிற்று. வேலை நிறுத்தமும் விலக்கிக் கொள்ளப் பட்டது.

இறுதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் முயற்சில் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் தொடர்ந்து ஈடுபட்டார். புதிய ஒப்பந்தம் ஏற்படும் வரை பழைய ஒப்பந்தத்தின்படி நாகர்கோவில் வாழ்க்கைச் செலவுப்

புள்ளியின் அடிப்படையில் அகவிலைப்படி அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையில் தொழிலாளர்கள் உறுதியாக நின்றனர். இதற்கு மாறாக தோட்ட உரிமையாளர்களும் இக்கோரிக்கைக்கு இணங்க உறுதியாக மறுத்துவிட்டனர்.

இச்சூழ்நிலையில் பேச்சு வார்த்தைகள் இணையாணையரின் முன்பு நடைபெற்றன. நிர்வாகப் பிரதிநிதிகள் தங்கள் நிலையை விட்டுக் கொடுக்க இசையவில்லை. இருதரப்பாரும் இவ்விதமாகத் தங்கள் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்காததால், இணை ஆணையர் தமது சமரச முறிவறிக்கையை 9—2—1984-லும் இறுதி அறிக்கையை 13—2—1984-லும் அரசுக்கு அனுப்பினார்.

தொழிலாளர் துறை ஆணையரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளை அரசு நன்கு பரிசீலித்து 24—2—1984 நாளைய அரசு தொழிலாளர் துறை நிலையாணை எண் 456-ல் கீழ்க்கண்ட கோரிக்கைகள் சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் முடிவிற்கு விடப்பட்டுள்ளன:

(1) 24—10—1979 நாளது உடன்படிக்கையின்படி அகவிலைப்படி வழங்குதல்.

(2) நாகர்கோவில் வாழ்க்கை செலவுப் புள்ளி—2,000 புள்ளிகளை இணைத்து மாத சம்பளம் ரூபாய் 500 லிருந்து ரூபாய் 600 வரை வழங்குதல்.

(3) அளவீட்டு அடிப்படை வீதத்தில் பால் வெட்டும் தொழிலாளர்களுக்கு மாத வருமானம் ரூபாய் 500-ம், அதிகப்படியான பால் வெட்டுபவர்களுக்கு கிலோவிற்கு ரூபாய் 2 அதிகமாகவும் வழங்குதல்.

(4) ஸ்கிராப் ரப்பர்—ஒரு கிலோவிற்கு ரூபாய் 1 வழங்குதல்.

(5) தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும், அளவீட்டு அடிப்படை வீத தொழிலாளர்களுக்கும் ஊதியத்தில் ரூபாய் 100 வேறுபாடு இருக்க வேண்டும்.

(6) நாகர்கோயில் வாழ்க்கை செலவுப் புள்ளி 2,000-க்கு மேல் ஒவ்வொரு புள்ளிக்கும் 1 காசு அகவிலைப்படி வழங்குதல்.

(7) மழை நாட்களுக்கு சம்பளம்.

(8) வீட்டு வாடகைப்படி மாதத்திற்கு ரூபாய் 20; மற்றும்.

(9) நிர்வாகக் கோரிக்கை வேலைப்பளுவை நிர்ணயித்தல்.

[1984 மார்ச் 6

கன்னியாகுமரி தனியார் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த நான்கு மாதங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததாலும், கோடிக் கணக்கான ரூபாய் பெறுமான உற்பத்தியில் பலத்த இழப்பும், ஊதிய இழப்பும் ஏற்பட்டதாலும், இரப்பர் பொருட்கள் சமுதாயத்திற்கு இன்றியமையாதது என்பதையும் சுமார் 2,500 தொழிலாளர்களின் நிலைமைகளையும் கருத்திற் கொண்டு, ரப்பர் தோட்டங்களில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைதியை நிலை நிறுத்திடும் எண்ணத்துடன் சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு தெரியும் வரை, தொழிலாளர்-நிர்வாகத்தார் ஆகிய இரு தரப்பாரும் ஏற்பதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகளை வரையறுத்து 1947 ஆம் வருட தொழிற் தகராறு சட்டம் பிரிவு 10-பின்கீழ் 24—2—1984 ஆம் நாளைய அரசு தொழிலாளர் துறை நிலையாணை எண் 458-ல் பின்வருமாறு ஆணை பிறப்பிக்கப் பட்டது:

(1) 24—10—1979 ஆம் நாளைய ஒப்பந்தத்தின் பகுதி 1 (f) ன் படியும், கன்னியாகுமரி மாவட்ட தனியார் ரப்பர் தோட்டங்களில் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் வழக்கத்தின்படியும், நிர்வாகத்தினர் 1—4—1982 முதல் வழங்கப்படாத உயர் அகவிலைப்படியினை 1—4—1982 முதல் வழங்கிட வேண்டும்.

(2) 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஏற்பட்ட 11—12—1982 ஆம் நாளைய ஒப்பந்தத்தின் பகுதி 1 (a) ல் குறிப்பிட்டவாறும், கன்னியாகுமரி மாவட்ட தனியார் ரப்பர் தோட்டங்களில் தற்பொழுது நடைமுறையிலிருக்கும் வழக்கத்தின்படியும், நிர்வாகத்தினர் தற்காலிகமாக அளித்த பணத்தை தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

(3) இருதரப்பினரும் அரசாணை வரப் பெற்ற 15 நாட்களுக்குள், மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை அமுல்படுத்துவதால் எழுகின்ற நிலுவைத் தொகை தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

(4) இந்த ஆணையைத் தொடர்ந்து, நிர்வாகத்தினரால் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிற தொகையை, தொழில் தீர்ப்பாயத்தின் நடுநிலைத் தீர்ப்பினபடி தொழிலாளர்களுக்கு வழங்கவிருக்கிற தொகையிலிருந்து சரி கட்டலாம்.

27—2—1984 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைப் பின்வாங்கிக் கொண்டு வேலைக்கு திரும்பினர். வேலை துவங்குவதற்கு சில முன் ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு, நிர்வாகத்தினர் 1—3—1984 முதல் தொழிலாளர்களை வேலைக்கு வருமாறு கேட்டுக் கொண்டனர். அதன்படி தொழிலாளர்கள் 1—3—1984 முதல் வேலைக்குத் திரும்பினர்.